**நிகழும் திருவள்ளுவராண்டு விளம்பி வருடம் 2018ம் ஆண்டு ஜீன் மாதம் 29ம் தேதி ஆனி மாதம் 19ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ள தாராபுரம் நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் விபரம்.**

----

1. தாராபுரம் நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்களில் பேருந்து நிலையத்தில் எடை மிஷின் வைத்து கொள்ளும் உரிமம், கடந்த 31.01.2018 அன்று பொது ஏல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதிலிருந்து 11 முறையாக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் கலந்து கொள்ளவில்லை. ஏல நிபந்தனைகளின்படி குத்தகைதாரரே எடை மிஷின் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதாலும், நகரின் பல பகுதிகளில் எடை மிஷின் பயன்படுத்தப்பட்டு வருவதால், ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வரவில்லை. எனவே, பேருந்து நிலையத்தில் எடை மிஷின் வைத்து கொள்ளும் உரிமத்தினை ஏல இனத்திலிருந்து நீக்கம் செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.5001/2017/அ3**

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

2. தாராபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய் பதிக்க தோண்டப்பட்ட சாலைகள் மற்றும் இயற்கை இடையூறுகளால் சேதமடைந்த சாலைகளில், மேம்பாட்டு பணிகள் மேற்கொண்டு, தார் சாலைகள் புதுப்பிக்க விரிவான திட்ட அறிக்கை கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | வார்டு எண் | சாலைகளின் வகைகள் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் சராசரி அகலம் (மீ) | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|
| 1 | அண்ணா நகர் மெயின் சாலை மற்றும் குறுக்கு தெரு, நாச்சிமுத்துப்புதூர் குறுக்கு தெரு, பொள்ளாச்சி ரோடு குறுக்கு தெரு, தேவேந்திரா தெரு, குளத்துப்புஞ்சை ரோடு, கண்ணன் நகர், எஸ்.எஸ்.எச்.எம் நகர், எல்.ஜி.ஜி.எஸ் காலனி, பெரியார் கிழக்கு தெரு மற்றும் மார்க்கெட் ரோடு ஆகியவற்றில் தார் சாலை திடப்படுத்துதல், அகலப்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் பணி. | 27,26, 18,25, 23,19 | Existi ng Damaged BT | 5.97 | 6.00 | 200.00 |

மேற்கண்ட பணியினை செயல்படுத்த தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TURIP) 2018–19ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்ய ஏதுவாக நகர்மன்ற தீர்மான எண் 536 நாள் 30.04.2018ல் இயற்றி நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதின் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.12981/2018/இ3 நாள்.27.06.2018 தேதியிட்ட கடிதத்தில் மேற்படி திட்டத்திற்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தகவல் மன்றத்தின் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ரூ.கோடியில்)

| நகராட்சி பெயர் | மதிப்பீட்டு தொகை | தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி | மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|---|
| தாராபுரம் | 2.00 | 0.76 | 0.60 | 0.44 | 0.20 |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டின் படி நிர்வாக அனுமதி வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம். மேற்கண்ட சாலைப் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நகராட்சி பங்களிப்பு தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

3. தாராபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு TN 33 - AV 2322 ல் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 14.06.2016 அன்று வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | காந்தி மோட்டார்ஸ், ஈரோடு | ரூ.118950/– |
| 2 | மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், பி.என்.ரோடு, திருப்பூர். | ரூ.121700/– |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள காந்தி மோட்டார்ஸ், ஈரோடு நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி தொகை.ரூ.118950/– ஏற்கலாம். அதற்கு ஆகும் செலவீனத் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.2256/2018/எச்1**

**<u>அலுவலகக்குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்

**4.** தாராபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு TN 78 A 1649 க்கு வருடாந்திர தகுதிச் சான்று பெற ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் **14.06.2016** அன்று வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | காந்தி மோட்டார்ஸ், ஈரோடு | ரூ.24550/— |
| 2 | மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், பி.என்.ரோடு, திருப்பூர். | ரூ.25000/— |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள காந்தி மோட்டார்ஸ், ஈரோடு நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி தொகை.ரூ.24550/— ஏற்கலாம். அதற்கு ஆகும் செலவீனத் தொகை வழஙகவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
ந.க.எண்.2326/2018/எச்1

**<u>அலுவலகக்குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்

**5.** தாராபுரம் வட்டப் பகுதிகளுக்குட்பட்ட நகராட்சி பகுதியில் அமையும் அனுமதியற்ற மனைப்புரிவுகளில் விற்பனை செய்யப்பட்ட தனித்த மனைகளை வரன்முறைப்படுத்தி உத்திரவு வழஙக **06.06.2018** அன்று சிறப்பு முகாம் நடந்த இடம் ஏற்பாடு செய்து தரும்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் சேலம் அவர்களின் **04.06.2018**ந் தேதிய ந.க.எண்.1694/2017 சேம3 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி நகராட்சி எல்லைக்குட்பட்ட உடுமலைசாலையில் உள்ள அரிமா அரஙகம் தேர்வு செய்யப்பட்டு **06.06.2018** அன்று சிறப்பு முகாம் நடத்தப்பட்டது. மேலும் அனுமதியற்ற மனை உரிமையாளர்கள் கூட்டம் மிகவும் அதிகமாக இருந்தமையால் சிறப்பு முகாமை **07.06.2018,08.06.2018** மற்றும் **12.06.2018** ஆகிய நாட்களுக்கும் நடத்தப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கப்பட்டதன் பேரில் மேற்கண்ட நாட்களில் தொடர்ந்து அரிமா அரஙகத்தில் சிறப்பு முகாம் நடத்தப்பட்டது,

சிறப்பு முகாம் நடைபெறுவதை பொதுமக்கள் மற்றும் அனுமதியற்ற மனை உரிமையாளர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் **6**x4 அகளப் நான்கு பிளக்ஸ் போர்டுகள் தயாரிக்கவும் மற்றும் ஆட்டோ மூலம் விளம்பரம் செய்யவும்,முகாமில் பணிபுரிந்த பணியாளர்களுக்கு தேவையான உணவு, தேனீர் வசதி மற்றும் அரிமா அரஙகத்திற்கு வாடகை,மின்கட்டணத் தொகை மற்றும் இதர செலவினஙகளுக்கான உத்தேச செலவுத் தொகையை ரூ.**200000/—**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**எப்1/1738/2018**

**அலுவலக குறிப்பு:** செலவினத்திற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**6.** தாராபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மீனாட்சிபுரம் வார்டு எண்**1**, பிளாக் எண்**1**, நகரளவு எண் 4/2 சி2 என்ற இடத்தில் கட்டுப்பட்ட திருமணமண்டபத்தின் முன்பகுதியில் கரூர் சாலையில் நகராட்சிக்கு சொந்தமான 30 **சென்ட்** பரப்பளவுள்ள OSR இடம் உள்ளது.

மேற்படி இடத்தில் தனது சொந்த செலவில் குழந்தைகள் பூங்கா அமைத்து பராமரிக்க அனுமதி கோரி வந்துள்ள ஈரோடு வித்யா மந்தீர் எஜிகேஷ்னல் டிரஸ்ட் அவர்களின் 11.04.2018ந் தேதிய கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
ந.க.எண. எப்1/1664/2018

அலுவலக குறிப்பு:

மேற்கண்ட OSR (30 சென்ட்) இடத்தினை பாதுகாக்கவும் தனி நபர்களின் ஆக்கிரமிப்புகளிலிருந்து தடுக்கவும்,பொதுமக்களின் நலன் கருதி மேற்படி OSR இடத்தில் மனுதாரரின் சொந்த செலவில் குழந்தைகள் பூங்கா அமைத்து பராமரிக்க வித்யா மந்தீர் எஜிகேஷ்னல் டிரஸ்ட் ஈரோடு அவர்களுக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் 3 வருடங்களுக்கு ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

<u>நிபந்தனைகள்</u>

1.மேற்படி OSR இடத்தில் நிரந்திர கட்டிடம் மற்றும் தற்காலிக கட்டிடங்கள் எதுவும் கட்டக் கூடாது.
2. OSR இடத்தில் மத சம்மந்தமான எந்த வழிபாட்டு தலங்களும் கட்டக் கூடாது.
3.மேற்கண்ட இடம் நகராட்சிக்கு தேவைப்படும்போது எந்த விதி நிபந்தனையுமின்றி திரும்ப ஒப்படைக்க வேண்டும்.
4. OSR இடம் எந்த உபயோகத்திற்கு வழஙகப்பட்டதோ அந்த உபயோகத்திற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும்.
5.மேற்கண்ட இடத்தில் சிறுவர் பூஙகா சம்பந்தமான அபிவிருத்திக் பணிகளை நகராட்சியின் மேற்பார்வையில் செய்யப்படவேண்டும்.
6.சிறுவர் பூஙகாவிற்கு வரும் பொதுமக்களிடமிருந்து எவ்வித கட்டணமும் வசூலிக்க கூடாது.
7.மேற்படி இடத்திற்கு முன்புறம் தாராபுரம் நகராட்சி சிறுவர் பூஙகா என பெயர் பலகை வைக்கப்படவேண்டும் அதில் பராமரிப்பு செய்வது மட்டும் தஙகளது டிரஸ்டு பெயரை குறிப்பிட வேண்டும்.
8.மேற்கண்ட பூஙகா பராமரிப்பு 3 வருடஙகளுக்கு மட்டும் பொருந்தும் இந்த அனுமதியை வைத்து எதிர் காலத்தில் இந்த இடத்திற்கு எந்த வித உரிமையும் கோரக் கூடாது
9.மேற்கண்ட நிபந்தனைகளில் எதுவும் மீறப்பட்டால் எவ்வித முன்னறிவிப்புமின்றி அனுமதி ரத்து செய்யப்படும்.

7. அரசாணைஎண்.15, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.20.08.2009இன் படியும் நகராட்சி நிர்வாக ஆணையர் சுற்றிக்கை ந.க.எண்.41802/2000/ஆர் நாள்.07.09.2009இன்படியும் தமிழ்நாடு திருத்தம் சட்டம் 15/2009–இன்படி காலிமனைவரியினை உயர்வு செய்ய வேண்டுமென ஆய்வாளர், உதவி இயக்குநர் அலுவலகம், உள்ளாட்சி நிதி தணிக்கை துறை திருப்பூர் (முகாம்) அவர்களின் சாத்தில் தெரிவித்துள்ளார்.

| தற்போது நிர்ணயம் செய்து வசூல் செய்யும் காலியிட வரி | 01.07.2018 முதல் காலியிட வரி வசூல் செய்ய வேண்டியது |
|---|---|
| A மண்டலம் ரூ.0.30பைசா ஒரு சதுரடிக்கு | A மண்டலம் ரூ.0.40பைசா ஒரு சதுரடிக்கு |
| B மண்டலம் ரூ.0.20பைசா ஒரு சதுரடிக்கு | B மண்டலம் ரூ.0.30பைசா ஒரு சதுரடிக்கு |
| C மண்டலம் ரூ.0.15பைசா ஒரு சதுரடிக்கு | C மண்டலம் ரூ.0.20பைசா ஒரு சதுரடிக்கு |

மேற்கண்ட விபரப்படி 01.07.2018 முதல் காலியிட வரி நிர்ணயம் செய்து வசூல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.3088/2018/சி1**

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**8.** தாராபுரம் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளிலும் கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி மற்றும் மீன் போன்ற இறைச்சி கடைகள் நகரின் அனைத்து தெருக்களிலும் குடியிருப்பு பகுதிகளிலும் வைத்து வியாபாரம் செய்யப்படுகின்றது. இவ்வாறு நகரில் பல இடங்களில் இறைச்சி கடைகள் உள்ளதால் இதன் உரிமையாளர்கள் இக்கடைகளிலிருந்து வரக்கூடிய திடக்கழிவுகளை குப்பை தொட்டிகளில் கொட்டியும் மற்றும் திரவக் கழிவுகளை கழிவு நீர் சாக்கடைகளிலும் கலந்துவிடுகின்றனர். இதனால் இந்த இறைச்சி கடைகளின் அருகில் உள்ள மற்ற பொருட்கள் விற்பனை செய்யும் வியாபாரிகளும், பொது மக்களும் பொது சுகாதாரம் பாதிக்கப்படுகின்றது என்றும் தெருக்களிலும் அருகில் குடியிருப்பவர்களுக்கும் அருவருப்பான தோற்றத்தை உண்டாக்குவதாகவும் ஒவ்வாமை ஏற்படுவதாகவும் நகராட்சிக்கு புகார் தெரிவிக்கின்றனர். நகரின் பல இடங்களிலும் இறைச்சி கடைகள் உள்ளதால் இந்த கடைகளை நகராட்சியின் மூலம் கண்காணிப்பது மிகவும் சிரமமான சூழ்நிலை உள்ளதுடன், இறைச்சி கடைகளை முறைப்படுத்தவும் முடிவதில்லை.

எனவே நகரின் பொதுசுகாதாரத்தை மேம்படுத்த நகரில் உள்ள அனைத்து வகையான இறைச்சி கடைகளும், வதை செய்யும் கடைகளும் ஒரே இடத்தில் ஒரு குடையின் கீழ் நகராட்சி வாரச்சந்தை வளாகத்தில் கொண்டு வர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.2512/2018/எச்1**

<u>அலவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. தினசரி நாளிதழில் விளம்பரம் செய்து பொது மக்களிடமிருந்து வரப்பெரும் ஆலோசணைகள் மற்றும் ஆட்சேபனைகளின் மீது இறுதி முடிவு எடுக்க ஆணையாளருக்கு முழு அதிகாரம் வழஙகலாம்.
3. தொடர் நடவடிக்கைக்காக மாவட்ட அரசிதழில் அறிவிப்பு வெளியிட்டு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**9.** தாராபுரம் நகராட்சி வார்டு–20 அம்பேத்கர் நகர் நகராட்சி பொதுக் கழிப்பிடத்தின் செப்ட்டிக் டேங்கிலிருந்து உறிஞ்சு குழிக்கு செல்லும் கழிவு நீர் குழாய் சேதமடைந்துள்ளது. இதனால் கழிவு நீர் வெளியேறி பொதுமக்களுக்கு சுகாதார கேடு ஏற்படும் நிலை உள்ளது. சுகாதாரக் கேடு ஏற்படாமல் தடுக்கும் வகையில் பழைய பி.வி.சி குழாய்களை அகற்றி புதிய பி.வி.சி குழாய் பொருத்தும் பணிக்கு மதிப்பீடு ரூ.60000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்: /2018/இ1**

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி தொகையினை பொதுநிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**10.** தாராபுரம் நகராட்சிக்கு சொந்தமான கடைகள் அரசாணை எண்.**92,** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.**03.07.2007**இல் தெரிவித்துள்ளபடி, நகராட்சி கடைகள் **9** ஆண்டுகளுக்கு **3** ஆண்டுகள் தொகுப்பு விகிதத்தில் மாத வாடகைக்கு குத்தகைக்கு விடப்பட்டது. ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை காலம் முடிவுற்ற காரணத்தால் மேற்படி குத்தகையினை புதுப்பித்து தர கோரி கீழ்க்கண்ட கடை குத்தகைதாரர் அரசாணையில் தெரிவித்துள்ளபடி புதுப்பித்தல் கட்டணம் ரூ.**1000/–** வாடகை நிலுவையின்றி செலுத்தி விண்ணப்பம் அளித்துள்ளார். அதன்பேரில் கீழ்க்கண்ட விபரப்படி கடையினை புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**இரண்டாவது மூன்றாண்டிற்கானகுத்தகை உரிமம் புதுப்பிக்க வேண்டிய கடையின் விபரம்**

| வ. எண் | வரிவிதிப்பு எண் | குத்தகை உரிமதாரரின் பெயர் | கடை அமைந்துள்ள இடம் | குத்தகைக்கு விடப்பட்ட நாள் | குத்தகை காலம முடி வடைந்த நாள் | குத்தகை முடிவ டையும் காலத்தில் செலுத்திய வாடகை தொகை ரூ. | 15% வாடகை உயர்வு தொகை ரூ. | புதிய வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2014007 | எம்.சாதிக்பாபு | உடுமலை சாலை கடை எண்.5 | 01.07.2014 | 30.06.2017 | 6600 | 990 | 7590 |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்
**ந.க.எண்.1819/2016/அ3**

**11.** தாராபுரம் நகராட்சி அலுவலகத்தில் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை (RO System) அப்புறப்படுத்த **30.05.2018**–ம் தேதியன்று முற்பகல் **11.00** மணியளவில் பொது ஏலம்விடப்பட்டதில் கலந்து கொண்டவர் விபரம்

| வ. எண் | பெயர் | பொறுப்புத் தொகை | தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.R.மாரிமுத்து | ரூ.2000/– | ரூ.2600/– |
| 2 | திரு.K.மயில்சாமி | ரூ.2000/– | ரூ.2700/– |
| 3 | திரு.அருண் | ரூ.2000/– | ரூ.2800/– |

மேற்கண்ட ஏலத்தில் உயர்ந்தபட்ச கேள்வித் தொகையான ரூ.**2800/–** கோரியுள்ள திரு.அருண் அவர்களின் ஏலத்தொகையினை ஏற்கவும், ஏலத் தொகை ரூ.**2800/–** மற்றும் GST **18%** (ரூ.**504/–**) ஆக மொத்தம் ரூ.**3304/–**ஐ செலுத்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.2347/2018/இ1**
**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**12.** தாராபுரம் நகராட்சி தினசரி மார்க்கெட் பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான காலி இடத்தில் ஆர்.சி.சி கூரை கடை கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.**6,00,000**/க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதி வழஙகலாம்.
2) இதற்கான செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

13. இந்நகராட்சியின் அலுவலக உபயோகத்திற்கு 2018–2019ம் நிதி ஆண்டுக்கு தேவையான பதிவேடுகள், எழுதுபொருள்கள் மற்றும் படிவஙகள் போன்றவற்றினை அரசு அஙகீகாரம் பெற்ற கூட்டுறவு அச்சகத்தில் அச்சடித்து வாஙகிக் கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஆறு இலட்சத்திற்கு) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.305/2017/டி2**

14. தாராபுரம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட பூஙகாக்களுக்கு முள் கம்பி வேலி அமைக்கும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பூஙகா அமைந்துள்ள இடம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | வார்டு 25 கீதா நகர் பூஙகா | ரூ. 3,15,000 |
| 2 | வார்டு 26 ஆஷா நகர் பூஙகா | ரூ. 2,20,000 |
| 3 | வார்டு 30 சிவசக்தி நகர் பூஙகா | ரூ. 2,30,000 |
| 4 | வார்டு 25 எல்.ஜி.ஜி.எஸ் காலனி பூஙகாக்கள் (5 எண்ணிக்கை) | ரூ. 5,55,000 |
| 5 | வார்டு 26 பழைய வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பூஙகா சர்வே எண்.86 | ரூ. 3,25,000 |
| 6 | வார்டு 26 பழைய வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பூஙகா சர்வே எண்.35 | ரூ. 3,10,000 |
| 7 | வார்டு 26 பழைய வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பூஙகா சர்வே எண்.166 | ரூ. 2,35,000 |
| 8 | வார்டு 26 பழைய வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பூஙகா சர்வே எண்.135 | ரூ. 2,40,000 |
| 9 | வார்டு 26 பிஷப் தார்ப் கல்லூரி அருகில் உள்ள புதிய வீட்டு வசதி வாரிய பூஙகா சர்வே எண்.7/2(வடக்கு) | ரூ. 2,50,000 |
| 10 | வார்டு 26 பிஷப் தார்ப் கல்லூரி அருகில் உள்ள புதிய வீட்டு வசதி வாரிய பூஙகா சர்வே எண்.7/2(தெற்கு) | ரூ. 2,40,000 |

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதி வழஙகலாம்.
2) இதற்கான செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

**15.** தாராபுரம் நகராட்சி சந்தைப்பேட்டை வளாகத்தில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது.

| | | |
|---|---|---|
| 1) | வாரச்சந்தை கடைகளுக்கு மேற்கூரை பழுது நீக்கம் செய்து தளம் அமைக்கும் பணி | **ரூ.700000/–** |
| 2) | சந்தைப் பகுதியில் லாரி மார்கெட் மற்றும் சந்தைக்கு தனியாக முள்கம்பி வேலி அமைத்து இடம் சுத்தம் செய்து பெயிண்டிங செய்யும் பணி | **ரூ.800000/–** |
| 3) | தாராபுரம் நகராட்சி சோளக்கடை வீதியில் உள்ள நகராட்சி கடைகளை மராமத்து செய்யும் பணி | **ரூ.300000/–** |

மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி தொகையினை நகராட்சி பொதுநிதி **2018–19**லிருந்து செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**16.** அ). தாராபுரம் நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்களில் கீழ்க்கண்ட குத்தகை இன வரிசை எண்களில் உள்ள கட்டண கழிப்பிடங்கள் **31.01.2018** அன்று முதல் பொது ஏல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதிலிருந்து **11** முறையாக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் எவரும் கலந்து கொள்ளவில்லை. மேற்படி கட்டண கழிப்பிடங்கள் உள்ள இடங்களில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்கள் அதிகம் வசித்து வருவதாலும், **மேலும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர்களுக்கு கழிவறை கட்டிக் கொடுக்கப்பட்டதாலும், பெதுமக்கள் பொதுக்கழிப்பிடத்தினை பயன்படுத்தாத காரணத்தினால்,** பொதுமக்களின் தேவை மற்றும் சுகாதார நிலையை கருத்தில் கொண்டும், மேற்படி கழிப்பிடங்களை அருகிலுள்ள பொதுமக்களே சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்துகொள்ள தெரிவித்துள்ளதாக, வருவாய் ஆய்வர் குறிப்பில் தெரிவித்துள்ளதன் அடிப்படையில் பொது ஏல இனத்திலிருந்து நீக்கம் செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| **குத்தகை இன வ.எண்** | **ஆண்டு குத்தகை இனம்** |
|---|---|
| 27 | வார்டு எண்.9 கோட்டை மேடு (பழைய ஆற்றுப் பாலம் முன்) கட்டணக் கழிப்பிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் |
| 28 | வார்டு எண்.10 கொளிஞ்சிவாடி (ஆற்றுப்படுகை)கட்டணக் கழிப்பிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் |
| 29 | வார்டு எண்.10 கொளிஞ்சிவாடி (ஆற்றுப்படுகை)கட்டணக் கழிப்பிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் |
| 30 | வார்டு எண்.11, மீனாட்சிபுரம் (ரெட்டாரவலசு ரோடு)கட்டணக் கழிப்பிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் |
| 31 | வார்டு எண்.11, சொக்கநாதபாளையம் (அரசமரம் அருகில்) கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணவசூல்செய்யும்உரிமம் |
| 32 | வார்டு எண்.11, சொக்கநாதபாளையம் (சூளைமேடு) கட்டணக் கழிப்பிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் |

| | |
|---|---|
| 34 | வார்டு எண்.12, உப்புத்துறைப்பாளையம் (ஆச்சியூர் ரோடு)கட்டணக் கழிப்பிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் |
| 35 | வார்டு எண்.13 பழைய கோட்டை மேடு கட்டணக் கழிப்பிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் |
| 40 | வார்டு எண்.20 ஜவகர் நகர் கட்டணக் கழிப்பிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் |
| 41 | வார்டு எண்.20 அம்பேத்கார் தெரு கட்டணக் கழிப்பிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் |
| 47 | வார்டு எண்.30, நேரு நகர் சமுதாயக்கூடம் உட்பகுதி கட்டணக் கழிப்பிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் |

ஆ தாராபுரம் நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்களில் கீழ்க்கண்ட குத்தகை **இன** வரிசை எண்களில் உள்ள கட்டண கழிப்பிடங்கள் **31.01.2018** அன்று முதல் பொது ஏல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதிலிருந்து **11** முறையாக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் எவரும் கலந்து கொள்ளவில்லை. மேற்படி இனங்கள் துறை மூலம் நகராட்சி பணியாளர்களை கொண்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. **மேலும் வருவாய் ஆய்வர் தனது குறிப்பில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் தெரிவித்துள்ளபடி, சொத்துமதிப்பு சான்று ரூ.**50000/- **செலுத்துபவர்கள் முன்வைப்புத் தொகை ரூ.**25000/- **லிருந்து ரூ.**10000/-**ஆகவும், சொத்துமதிப்பு சான்று இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய முன்வைப்புத் தொகை ரூ.**25000/-**லிருந்து ரூ.**10000/-**ஆக குறைத்து ஏல நடவடிக்கை மேற்கொள்ளும் பட்சம் ஏலம் போக வாய்ப்பு உள்ளது எனத் தெரிவித்துள்ளார். எனவே ஏல வைப்புத்தொகையை குறைத்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

| | |
|---|---|
| 19 | வார்டு எண்.2 நேரு நகர் (ஏ.டி.வீதி) கட்டணக் கழிப்பிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் |
| 20 | வார்டு எண்.2, காட்டூர் நாடார் தெரு (பைபாஸ் ரோடு)கட்டணக் கழிப்பிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் |
| 48 | வார்டு எண்.30 நேருநகர் (சமுதாயக்கூடம் அருகில்) கட்டணக் கழிப்பிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் |

**ந.க.எண்.5001/2017/அ3**

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

**17.** தாராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட அலங்கியம் சாலை கிழபுறம் மழைநீர் வடிகால் இல்லாத காரணத்தினால் அப்பகுதியில் மழைநீர் சாலைகளில் தேங்கி சுகாதார கேடு ஏற்படுகிறது. எனவே, அப்பகுதியில் புதிதாக மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.**9,50,000**/க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதி வழஙகலாம்.
2) பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**18.** தாராபுரம் நகராட்சி அண்ணாநகர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியின் தென்புறம் சுற்றுச்சுவர் கூரைத் தகடுகள் கொண்டு உயர்த்தி அமைக்கவும், பூஙகா மற்றும் மேல்நிலை

நீர்தேக்கத் தொட்டிக்கு இடையில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1.60 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி தொகையினை பொதுநிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

19. தாராபுரம் நகராட்சி கொட்டாபுளிபாளையம் சாலையில் இரண்டு இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டதற்கு முள்கம்பி வேலி அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.65,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி தொகையினை பொதுநிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

20. தாராபுரம் நகராட்சி புதிய காவல் நிலைய வீதி உடுமலைரோடு சந்திப்பு முதல் சூர்யா பேக்கரி வரை மழைநீர் வடிகால் இல்லாததால் மழைநீர் வெளியேற இயலாத நிலை உள்ளது. மேற்படி இடத்தில் மழைநீர் வெளியேற்ற ஏதுவாக புதிதாக மழைநீர் வடிகால் அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2,10,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி தொகையினை பொதுநிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

21. தாராபுரம் நகராட்சி பலிஜ்வார் நகராட்சி தொடக்கப் பள்ளி வளாகத்தில் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ள கழிப்பிட சுவரை இடித்து சமப்படுத்தவும், கழிப்பிடத்தின் செப்டிக் டேஙகிலிருந்து உறிஞ்சு குழிக்கு செல்லும் கழிவு நீர் குழாய் சேதமடைந்து கழிவுநீர் வெளியேறுவதை தடுக்கும் பொருட்டு பழைய பி.வி.சி குழாய்களை அகற்றி புதிய பி.வி.சி குழாய் பொருத்தவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.60000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்:2917 /2018/இ1**

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி தொகையினை கல்வி நிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

22, தாராபுரம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட பூஙகா பகுதிகளில் சிறு உரக்கிடஙகு (Onsite Compost) கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பூங்கா அமைந்துள்ள இடம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | வார்டு 14 பூங்கா சாலையில் உள்ள ராமசாமி பூங்கா | ரூ. 1,30,000 |
| 2 | சக்தி நகர் பூங்கா | ரூ. 1,30,000 |
| 3 | நகராட்சி புதிய அலுவலக வளாகம் | ரூ. 1,00,000 |

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதி வழஙகலாம்.
2) இதற்கான செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

23. தாராபுரம் நகராட்சியில் உரக்கிடங்கு பகுதியில் உள்ள குப்பை மேடுகளை தற்பொழுது உள்ள அளவில் Techometric Survey கணக்கீடு செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,20,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழஙகலாம்.

24. தாராபுரம் நகராட்சி வார்டு—19 சக்திநகர் பகுதியில் உள்ள பூஙகா பராமரிப்பு செய்தல், பூஙகவிற்குள் இருக்கும் கிணற்றினை குடிநீருக்கு பயன்படும் வகையில் தூர்வாறி சுத்தம் செய்தல் மற்றும் முன்புறம் வடிகால் அமைத்திடவும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.4,00,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி தொகையினை நகராட்சி பொதுநிதி 2018—19ல் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆணையர் மற்றும்
தனிஅலுவலர்
தாராபுரம் நகராட்சி